# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்:9 இதழ்:9 செப்டம்பர் 2023 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL: 9 ISSUE NO : 9 September 2023 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-



# நான் வெறுமையான பாத்திரம்! என்னை பயன்படுத்தும்!

**கையில் ஒரு வேதாகமத்துடன் சகோதரர் Dr. ஆனந்த ஸ்திரா அவர்களை சந்தித்து ஜெபித்தேன். சகோதரர் சொன்ன தீர்க்கதரிசனத்தின்படியே 500 பேர் உட்காரக்கூடிய அருமையான ஆலயமும், வல்லமையான ஊழியத்தையும் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்டேன்.**



என் பெயர் இம்மானுவேல். என் மனைவி பெயர் குளோரி கிரேஸ். 4 வருடங்களுக்கு முன்பாக என் கையில் பைபிள் மட்டும் இருந்தது. ராஜமன்றியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக் கொண்டு **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் எனது எதிர்காலத்திற்காக ஜெபிக்கும்படி கண்ணீருடன் கூறினேன்.

**சகோதரர் பாரத்துடன் எனக்காக ஜெபித்து, மகனே கலங்காதே! கர்த்தருடைய வழிகளும், அவரது நினைவுகளும் நம் நினைவுகளைக் காட்டிலும் பெரியவைகள். ஏசாயா 55:8-9. எரேமியா 29:11-ன்படி நீங்கள் தைரியமாய் செல்லுங்கள்.**

**கர்த்தராகிய இயேசு உங்களுக்கு ஒரு பெரிய சபையையும், வல்லமையான ஊழியத்தையும் தருவார். நான் 500 ரூபாய் தருகிறேன். அதை வைத்துக்கொள்ளுங்கள். கர்த்தர் அதை ஆசீர்வதித்து பெருகப் பண்ணுவார் என்று இயேசுவின் நாமத்தில் ஜெபித்து அனுப்பினார்கள்.**

என்ன ஆச்சரியம்! **கர்த்தர் அந்த ஜெபத்தைக் கேட்டு அன்றிலிருந்து என்னை ஆசீர்வதிக்க ஆரம்பித்தார். என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் நிறைய அற்புதங்களை செய்தார். சகோதரர் தீர்க்கதரிசனமாக சொன்னபடியே ஆசீர்வாதத்தின் ஊற்று பெருகியது.** அதன் பயனாக 4 வருடத்தில் 500 பேர் உட்காரக்கூடிய ஒரு நல்ல ஆலயத்தை சொந்தமாக கர்த்தர் தந்தார். ஐந்நூறுக்கும் அதிகமான விசுவாசிகள் எங்கள் சபையில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்.

ஊழியத்திலும் தேவ வல்லமை வெளிப்பட்டது. **பல கிராமங்களிலிருந்து மக்கள் வந்துக்கொண்டிருக்கிறார்கள். வருகிற அனைவரது வாழ்க்கையிலும் கர்த்தர் அநேக அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்து வருகிறார். இந்த மாபெரும் அதிசயங்களை கண்டு நானும், என் மனைவி, பிள்ளைகளும் தொடர்ந்து சாட்சியாக வாழுவோம். எங்கள் காலமெல்லாம் கர்த்தருக்கும், அவருடைய தீர்க்கதரிசிக்கும் ஊழியத்திற்கும் உண்மையாக இருப்போம்.**

**- Pr. இம்மானுவேல், ராஜமன்றி.**



# அன்பரின் ஊழியம்

மலர்:9 ◆ செப்டம்பர் 2023 ◆ இதழ் 9

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

எங்களை நேசித்து ஜெபித்து தாங்குகிற அன்பு பங்காளர்கள் ஒவ்வொருவரையும் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் அன்போடு வாழ்த்துகிறேன்!

> ✦ **சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும்,**
>
> ✦ **சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடிய சாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்.**
>
> **– கொலோ. 1:10–11**

மேற்கூறிய வசனங்களின்படி இந்த கொடிய காலங்களில் நம்முடைய ஆத்துமாவை தப்பித்துக் கொள்ள ஒரே ஒரு வழி கர்த்தரை அறிகிற அறிவில் வளருவது தான்! இந்த வளர்ச்சி மனுஷர் மூலமாக நாம் பெற்றுக் கொள்ள முடியாது. ஒவ்வொரு நாளும் கர்த்தரை நேசித்து, வேதத்தை வாசித்து, பரிசுத்த ஆவியின் நிறைவில் நடத்தப்படும்பொழுது தான் நாம் இன்னும் அவரை அதிகமாக அறிந்துக் கொள்ளமுடியும். எனவே தவறான போதனைகளை பின்பற்றி இயேசுவோடு உள்ள ஐக்கியத்தை விட்டு விடாதிருங்கள்.

ஆழமான ஐக்கியம் கர்த்தரோடுகூட இருக்கையில் நாம் மாத்திரமல்ல நம் குடும்பத்தையும் ஆதாயமாக்கி கொள்ள முடியும்.

செப்டம்பர் 5-ம் தேதி அன்று ஆசிரியர் தினத்தை சிறப்பிக்கின்றோம். **ஆசிரியப் பணியை உண்மையோடும், பொறுப் போடும் செய்கிற மக்களை கர்த்தர் தாமே ஆசீர்வதிப்பாராக! விசேஷமாக கீழ்ப்**

ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |

24 மணி நேர ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 94888 45627
காலை 9.30 மணி முதல் இரவு 7.00 மணிவரை ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்: 80987 42638
Telugu & Hindi : 99445 36343, Malayalam : 94889 32937, Kannada : 90031 17205
e-mail: info@mojindia.org website: www.ministryofjesus.in

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி – 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

**படியாத, தவறான வழியிலே நடக்கின்ற பிள்ளைகளை அன்பிலும் நற்போதகத்திலும் நடத்த கர்த்தர் உங்களுக்கு ஞானத்தையும் பொறுமையையும் தருவார்.**

கடந்த மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். ஏராளமான மக்கள் வந்து கலந்துக்கொண்டு ஜெபித்து சென்றனர்.

**செப்டம்பர் மாதம் திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், வாரங்கல், திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் கூட்டங்கள் நடைபெறயிருக்கிறது. உங்கள் பகுதியில் நடைபெறும் கூட்டங்களில் கலந்துக் கொண்டு அற்புதங்களையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுச் செல்லுங்கள்.**

நம்முடைய ஜெப ஸ்தலம் புதுப்பித்தல் பணிகள் அனைத்தும் தடையில்லாமல் நடைபெற தொடர்ந்து ஜெபியுங்கள்.

உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் வேலை செய்யதக்கதான பல வேலை வாய்ப்புகள் எங்கள் அலுவலகத்தில் உள்ளது. பத்திரிக்கையின் 19-ஆம் பக்கத்தில் பார்த்து விண்ணப்பிக்கும்படி சொல்லுங்கள்.

எங்கள் அப்பா, அம்மா இருவரின் நல்ல சுக, பெலனுக்காக அனுதினமும் ஜெபியுங்கள். ஊழியத்தின் நிமித்தம் நாங்கள் பல இடங்களுக்கு பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. கர்த்தர் எங்கள் அனைவரையும் நல்ல சுகத்துடன் பாதுகாக்க ஜெபியுங்கள். எங்கள் குடும்பங்களுக்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

**இம்மாத வாக்குத்தத்த வசனங்கள்**

**ஏசாயா 43:1**
**நீதிமொழிகள் 3:10**
**சங்கீதம் 112:2**
**செப்பனியா 3:20**

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

**அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்**

**தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

நம்பிக்கை TELEVISION

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 முதல் 9.00 வரை

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

புதன், வியாழன், வெள்ளி,
இரவு 7.00 முதல் 7.30 வரை

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

HARVEST TV கேரளம்

சனி
இரவு 7.30 முதல் 8.00 வரை



# புதிய செயல்
# New Thing

தேவ செய்தி : Rev.Dr.A. ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் எனக்கன்பான பங்காளர்களே, பத்திரிக்கை வாசகர்களே, இந்த மாதத்தின் வாக்குத்தத்த செய்தியின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதித்து பெலப்படுத்தி இந்த மாதம் முழுவதும் உடனிருந்து வழி நடத்துவார்.

புதிய மாதத்தில் தேவன் உங்களுக்கு கொடுக்கிற வார்த்தை, **இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன், இப்பொழுதே அது தோன்றும், நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன். ஏசாயா 43:19.** இது நம் ஆண்டவராகிய கர்த்தர் சொல்கிற மகிழ்ச்சியான வார்த்தை. சகலத்தையும் சிருஷ்டித்து பாதுகாத்து வருகிற கர்த்தர் ஒருவர் மட்டுமே உங்கள் வாழ்க்கையில் புதிய காரியத்தை செய்ய முடியும். புதிய செயல்களை செய்வதற்கு தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார்.

புது ஆடைகள், புது செல்போன், புது வாகனம் என இதையெல்லாம் அனைவருமே விரும்புவோம். புதிய இடத்திற்கு செல்லும்பொழுது ஒருவித மகிழ்ச்சி ஏற்படுகிறது. அவ்வாறே புது வேலையில் சேரும்பொழுது, புது தொழில் துவங்கும்பொழுது ஒருவித உற்சாகம் தோன்றுவது இயல்பே! புதிய செயல் அனைவராலும் வரவேற்கப்படுகிறது.

இந்த செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற உங்கள் வாழ்விலும் கூட கர்த்தர் புதிய செயல்களை செய்யவே விரும்புகிறார். உங்களுடைய படிப்பு அல்லது வேலையில் நீங்கள் எதிர்பார்த்து இருக்கிற காரியங்களில் ஆண்டவர் புதிய காரியங்களை செய்வார். உங்களுடைய உடல்நலம் சம்பந்தப்பட்ட காரியங்களில் புதிய காரியம் செய்வார். பழுதடைந்த பெலவீனமான உறுப்புகளை ஆண்டவர் சரிசெய்வதன் மூலம் ஒரு புதிய காரியத்தை உங்கள் சரீரத்தில் செய்ய முடியும். உலகப்பிரகாரமாகவும் செய்வார். உங்கள் குடும்பத்தில் உடைந்து போன உறவுகளை சரிசெய்து மீண்டும் ஒன்றாக இணைப்பதன் மூலம் புதிய செயலை செய்வார். ஆவிக்குரிய பிரகாரமாகவும் ஆண்டவர் செய்வார். ஆவிக்குரிய ஜீவியத்தில் உள்ள வறட்சியை நீக்கி செழிப்பை தருவார். இவ்வாறு அவரவர் வாழ்வில் கர்த்தர் புதிய செயல்களை செய்வார் என்பதில் சந்தேகமில்லை.

ஒவ்வொரு மனிதனும், மனுஷியும் புதிய செயல்களையே விரும்புகிறார்கள். பிரியமான வர்களே, **உங்கள் வாழ்க்கையிலும் ஆண்டவர் புதிய காரியத்தை செய்ய முடியும். உங்கள் வாழ்க்கையில் ஆண்டவர் புதிய செயல்களை செய்ய நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை தொடர்ந்து தியானிப்போம்.**

## 1. முந்தினவைகளை நினைக்க வேண்டாம்

**முந்தினவைகளை நினைக்கவேண்டாம், பூர்வமானவைகளைச் சிந்திக்கவேண்டாம். ஏசா 43:18** ஆம். பிரியமான தேவ பிள்ளைகளே, முந்தினவைகளையும் நடந்து முடிந்தவைகளையும் இனி நினைக்க வேண்டாம். பழைய காரியங்களை,

பூர்வமானவைகளையே நினைத்துக் கொண்டிருக்கவும் வேண்டாம். அந்த பழைய காரியத்திலேயே உங்கள் மனது தங்கிஅப்படியே தேங்கிவிடக் கூடாது. பழைய காரியத்தையே மீண்டும் மீண்டும் மனதில் கொண்டு வந்து அதை ஆராய்ச்சி செய்யவும் வேண்டாம்.

பிசாசுக்கு மனிதர்களுடைய எதிர்காலத்தை குறித்தோ, இனி நடக்கப்போவதைக் குறித்தோ தெரியாது. அவனுக்கு கடந்த காலம் மட்டுமே தெரியும். கடந்த வாழ்க்கையை நினைவுக்கு கொண்டுவரச்செய்து மனிதர்களை சோர்வுக்குள் கொண்டு செல்கிறான். பழைய வாழ்க்கை மட்டுமே அவனுக்கு தெரியும். அதனால் இறந்த காலத்தைகுறித்தே அவன் சொல்வான். வேதத்தில் அவன் வருங்காரியத்தைக் குறித்து தீர்க்கதரிசனம் சொன்னதாக எங்குமே இல்லை. ஏனென்றால் அவனுக்கு வருங்காலத்தை குறித்து தெரியாது.

இஸ்ரவேல் ஜனங்கள் 400 ஆண்டுகளுக்கு மேல் எகிப்தில் அடிமையாக வாழ்ந்தார்கள். அவர்களை கர்த்தர் தம் ஓங்கிய புயத்தாலும் பலத்த கரத்தாலும் மீட்டு அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்து வனாந்தர மார்க்கமாய் நடத்திச்சென்றார். பிசாசு அவர்களை சந்தோஷமாக போகவிடாமல் அவர்களுக்குள் ஒரு சலிப்பை, முறுமுறுப்பை கொண்டுவருகிறான். எப்படியென்றால் நாங்கள் சாப்பிட்டு திருப்தி அடைந்த அந்த எகிப்து தேசத்திலேயே செத்துப்போயிருந்தால் நல்லது என சொல்லும் அளவிற்கு அவர்களை சோர்வடைய செய்தான். **நாங்கள் இறைச்சிப் பாத்திரங்களண்டையிலே உட்கார்ந்து அப்பத்தைத் திர்ப்தியாகச் சாப்பிட்ட எகிப்து தேசத்திலே, கர்த்தரின் கையால் செத்துப்போனோமானால் தாவிளை, இந்தக் கூட்டம் முழுவதையும் பட்டினியினால் கொல்லும்படி நீங்கள் எங்களைப் புறப்படப் பண்ணி, இந்த வனாந்தரத்திலே அழைத்துவந்தீர்களே என்று அவர்களிடத்தில் சொன்னார்கள். யாத்தி.16:3** இஸ்ரவேல் ஜனங்களை மீண்டும் அடிமைத்தன வாழ்விற்கு கொண்டுபோகவே பிசாசு விரும்பினான்.

ஆண்டவர் வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங்களை மிகவும் ஆச்சரியமாய் நடத்தினார். வனாந்திரத்தில்அவர் செய்த அனைத்து புதிய செயல்களை அவர்கள் பார்த்திருந்தும் அவர்கள் மனது பழைய வாழ்க்கையை நோக்கியே திரும்பினது.

அதேப்போல உங்களையும் சில நேரங்களில் பழைய வாழ்விற்கும், பாவ வாழ்கைக்கும் கொண்டு செல்வதற்காக அவைகளையே ஞாபகப்படுத்திக்கொண்டு இருப்பான். நீங்கள் கர்த்தருக்குள் வாழ நினைத்தாலும் அவன் உங்களை பழைய வாழ்க்கையை நோக்கியே திருப்ப முயற்சிப்பான். கர்த்தர் உங்கள் வாழ்க்கையில் புதிய காரியத்தை செய்ய நீங்கள் பழைய வாழ்க்கையை மறக்க வேண்டும். முந்தினவைகளை நினைக்க வேண்டாம். **(Don't remember the past things)**

புராட்டஸ்டேன்ட் உருவாக காரணமாயிருந்த மிகவும் புகழ் பெற்ற தேவ மனிதரின் பெயர் மார்டின் லூதர். அவர் கர்த்தருக்குள் பரிசுத்தமாய் வாழ்ந்துக்கொண்டிருந்த சமயத்தில், அவர் பழைய காலத்தில் செய்த தவறுகளையும், பாவங்களையும் பிசாசு பட்டியல் போட்டு அவரிடம் காட்டினான். அவருக்கு பயம் வந்துவிட்டது. என் பாவங்கள் மன்னிக்கப்படவில்லையா என்ற சந்தேகம்கூட வந்தது. ஆனால் அடுத்த வினாடியே **பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அவருக்குள் இறங்கியவுடன் அவர் சிவப்பு பேனாவை எடுத்து இத்தனை பாவங்களும் இயேசுவின் இரத்தத்தால் என்றைக்கோ கழுவப்பட்டது என எழுதினார்.**

முந்தினவைகளை நினைத்தால் உங்கள் விசுவாச வாழ்க்கையில் ஒரு தடுமாற்றம் ஏற்படும். கடந்ததை யோசித்துக்கொண்டே இருந்தால் அடுத்த காரியத்தை செய்ய உங்களால் முடியாது. உங்களுடைய வாழ்க்கையில் நடந்து முடிந்தவைகளை நினைப்பதில் எந்த பயனும் இல்லை. ஆகவே **கர்த்தர் உங்கள் வாழ்வில் புதிய காரியங்களை செய்ய வேண்டுமானால் நீங்கள் முந்தினவைகளை நினைக்கக்கூடாது.**

பரிசுத்த பவுலைப் போன்று நீங்களும் பழைய வாழ்வை மறந்து உங்களுக்கு முன்பாக இருக்கிற வெற்றி வாழ்க்கையை நோக்கி ஓட பழகுங்கள். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் நீங்கள் வெற்றி சிறந்தவர்களாய் வாழ்வீர்கள்.

**பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். பிலிப்பியர் 3:13-14**

## 2. பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின!

**ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. 2கொரி. 5:17**

கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக வேண்டுமென்பதே ஒவ்வொரு தேவ பிள்ளையின் ஏக்கமாய் இருக்க வேண்டும். உலகத்தோடு ஒட்டி ஒடிக் கொண்டிருந்தால் உலக மனிதர்களை பிரியப்படுத்த வேண்டும் என நினைத்தால் ஆண்டவர் உங்கள் வாழ்வில் புதிய செயலை செய்யவே முடியாது. நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தால் மட்டுமே ஆண்டவர் புதிய காரியத்தை செய்வார். கிறிஸ்துவுக்குள் வாழும்பொழுது பழையவைகள் அனைத்தையும் ஆண்டவரே நீக்கி விடுவார். புது சிருஷ்டியாக மாற்றுகிறார்.

**உங்கள் வாழ்க்கையில் கிறிஸ்து வெளியே இருக்கக்கூடாது. நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டும்.** உங்கள் வாழ்க்கை எப்படி இருக்கிறது? ஆண்டவரோடு கொஞ்ச நேரமும், உலகத்தோடு கொஞ்ச நேரமும் என உள்ளே போய், வெளியே வந்து போகிற ஒரு வாழ்க்கையாக இருக்கிறதா?என சிந்தித்துப் பாருங்கள்.

**நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தால் பழையசெயல்கள் அனைத்தும் உங்களைவிட்டு ஓடிவிடும். உங்களுடைய சொல், செயல், சிந்தனை அனைத்திலும் ஒரு மாற்றம் ஏற்படும். பழையவைகள் அனைத்தும் மாறிவிடும். அந்த மாற்றங்களே உங்கள் வாழ்வில் புதிய காரியங்கள் நடப்பதற்கு உதவியாக இருக்கும்.**

கிறிஸ்துவுக்குள் நீங்கள் வாழும்பொழுது புதிய காரியத்தை செய்ய ஆண்டவர் ஆயத்தமாய் இருக்கிறார். அதைப் பெற்றுக்கொள்ள நீங்கள் ஆயத்தமாய் இருக்கிறீர்களா என்பதே அவசியம். புதிய காரியம், புதிய செயலை செய்ய ஆண்டவர் ஆயத்தமாய் இருக்கிறார். ஒரு வேளை உங்கள் வாழ்க்கையில் எந்த மாற்றமும் இல்லையென்றால் அது ஆபத்தானது கவனமாயிருங்கள்.

**ஆகவே முந்தினவைகளை நினைக்காதீர்கள். கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் வாழுங்கள். மேற்கூறப்பட்ட இந்த இரண்டு காரியங்களையும் நீங்கள் செய்யும்பொழுதுதான் ஆண்டவர் உங்கள் வாழ்வில் அதிசயமான காரியங்களை, நன்மையான காரியங்களை புதிய காரியங்களை செய்ய முடியும். கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டி, புது வாழ்க்கை என புதிய ஆரம்பத்தை காண்பீர்கள் .... புது சிருஷ்டியே காரியம். (கலா.6:15)**

## புதிய காரியம் என்பது அசாதாரணமான செயல்

**நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன். ஏசாயா 43:19.** வனாந்தரம் என்பது முழுமையான வெறுமை, எவ்வித உதவியும் பெற இயலாதநிலை. வனாந்தரத்தில் வழி இருக்காது. மனிதர்கள் இருக்கமாட்டார்கள், எந்தவிதத்திலும் பசுமையான சூழலை பார்க்க முடியாது.

பல ஆண்டுகளுக்கு முன் தூத்துக்குடி மாவட்டத்தில் ஒரு குறிப்பிட்ட சபையில் நான் போதகராக பணியாற்றிக் கொண்டிருந்தப்பொழுது அந்த ஊரில் உள்ள தெருக்களில் தார் ரோடோ, சிமெண்ட் ரோடோ கிடையாது. காரணம் அந்த ஊர் தெருக்களில் கடற்கரை போன்று மணல் தான் அதிகமாய் இருக்கும். அந்த காலத்தில் மிஷனெரிகள் நடந்த இடம், மிஷனெரிகள் உலாவின இடம் என சொல்லி மக்கள் அவர்கள் நினைவாக அந்த மணலில்தான் நடக்கிறார்கள். அவர்கள் ரோடு போடுவதை விரும்பவில்லை. அப்படியே ரோடு போட்டாலும் அவ்வளவு மணலையும் எடுத்தால் மட்டுமே ரோடு போட முடியும். அதேப்போல வனாந்தரத்திலும் ரோடு இருக்காது. மரம் செடி இருக்காது.

ஆனால் **இலட்சக்கணக்கான இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆண்டவர் வனாந்தரத்தில் ஒரு வழியை ஏற்படுத்தி, அவ்வளவு பெருந்திரளான ஜனக்கூட்டத்தையும் மிருக ஜீவன்களையும் நடத்தினார். இதுதான் அசாதாரண காரியம்.**

பாலைவனத்தில் ஆறுகள் இருக்காது. எந்த நீர் நிலைகளும் இருக்காது. ஆனால் **வனாந்தரத்தில் இலட்சக்கணக்கான ஜனங்களின் தாகத்தை ஆண்டவர் தீர்த்தார். இந்த புதிய செயலை ஆண்டவர் செய்வதன் நோக்கம் என்னவெனில் கர்த்தர் தமது மகிமையை இஸ்ரவேல் ஜனங்கள் அறிய வேண்டும் என்பதற்காகவே செய்கிறார்.**

புதிய காரியங்கள் செய்வதில் ஆண்டவர் உண்மையுள்ளவராக இருக்கிறார். நீங்கள் செய்ய வேண்டியதை செய்யும்பொழுது அவர் செய்ய வேண்டியதை அவர் சரியாக செய்வார். அவை சாதாரண காரியமல்ல. அவர் செய்யும் பொழுது அது அசாதாரண காரியமாகவே இருக்கும். அசாதாரண காரியம் என்பது நம்மால் முடியாத காரியம், இது நடக்காது அவ்வளவுதான் என்கிற சூழலில் ஆண்டவர் புதிய காரியங்களை செய்வார். அது தான் அசாதாரண செயல் ஆகும். தேவனாலே எல்லாம் கூடும். **ஆம். சாராள் கர்ப்பம் செத்த நிலையில் ஈசாக்கை பெற்றெடுத்தாள். இது தான் அசாதாரணமான செயல்.**

சில வருடங்களுக்கு முன்பு ஒரு தம்பதியினர் ஜெபம் செய்வதற்காக என்னிடம் வந்தனர். அப்பொழுது அந்த சகோதரி தனியார் கல்லூரியில் விரிவுரையாளராக இருந்தார்கள். அதே சமயத்தில் அரசு கல்லூரிகளில் விரிவுரை யாளர்களுக்கான காலி பணியிடங்கள் நிரப்புதல் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது. **அப்பொழுது அதற்கான தேர்வை அந்த சகோதரி எழுதினார்கள். அவர்களுக்காக நானும் விசேஷித்த ஜெபம் செய்து நம்பிக்கையோடு அனுப்பினேன். தேர்வு முடிவுகள் வெளிவந்தது. அதன் பின் பணி நியமன அட்டவணையில் இவர்களுடைய பெயர் 100-வது இடத்தில் இருந்தது. 100-க்கு பிறகு எந்த பெயரும் இல்லை. இவர்கள் தான் கடைசி நபர். அவர்கள் சொன்னார்கள், இது கர்த்தரால் மட்டுமே நடந்த செயல்!** இன்றும் அரசு கல்லூரியில் பேராசிரியராக அந்த சகோதரி பணியாற்றிக் கொண்டிருக் கிறார்கள். இது அவர்கள் வாழ்வில் தேவன் செய்த அசாதாரணமான செயல் ஆகும்.

அசாதாரணமான புதிய செயல்களை செய்வதற்கு பழைய ஏற்பாட்டு காலத்திலும் புதிய ஏற்பாட்டு காலத்திலும் தேவன் பயன்படுத்தின இரண்டு பாத்திரங்களை உங்களுக்கு கோடிட்டு காட்ட விரும்புகிறேன்.

## 1. பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த மோசே

**மோசே இஸ்ரவேல் ஜனங்களைச் சிவந்த சமுத்திரத்திலிருந்து பிரயாணப்படுத்தினான். அவர்கள் சூர் வனாந்தரத்துக்குப் புறப்பட்டுப் போய், மூன்றுநாள் வனாந்தரத்தில் தண்ணீர் கிடையாமல் நடந்தார்கள். யாத்தி. 15:22.**

சூர் வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங் களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. ஒரு இடத்தில் தண்ணீர் இருந்தது. ஆனால் அது கசப்பான தண்ணீர். உடனே ஜனங்கள் முறுமுறுக்க ஆரம்பித்து விட்டார்கள். ஒரு மரத்தை தண்ணீருக்குள் வெட்டிப்போடு என தேவன் மோசேயிடம் சொன்னார். அங்கு புதிய செயல் நடைபெற்றது. கசப்பான தண்ணீர் மதுரமான தண்ணீராக மாறியது. கசப்பான தண்ணீர் மதுரமான தண்ணீராக மாற ஒரு மரத்தை ஆண்டவர் காண்பித்தார். ஆம் மோசேயைக் கொண்டு நான் புதிய செயல்களை செய்வேன் என்பதை அவர்கள் அறிந்துக்கொள்வதற்கு அடையாளமாகவே ஒரு மரத்தை தண்ணீரில் போடச்செய்தார்.

அடுத்து சீன் வனாந்தரத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்கள் பயணமான போதும்தேவன் ஒரு புதிய செயலை செய்தார். **பின்பு இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் கர்த்தருடைய கட்டளையின்படியே சீன் வனாந்தரத்திலிருந்து புறப்பட்டு, பிரயாணம்பண்ணி, ரெவிதீமிலே வந்து பாளயமிறங்கினார்கள், அங்கே ஜனங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லாதிருந்தது. யாத்தி. 17:1** ரெவிதீமியில் மக்களுக்கு குடிக்க தண்ணீர் இல்லை. மக்கள் முறுமுறுக்க ஆரம்பித்தனர்.

மோசே கர்த்தரை நோக்கி கூப்பிட்ட பொழுது, கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் மூப்பரில் சிலரை உன்னோடே கூட்டிக்கொண்டு, நீ நதியை அடித்த உன் கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டு, ஜனங்களுக்கு முன்னே நடந்துபோ. அங்கே ஓரேபிலே நான் உனக்கு முன்பாகக் கன்மலையின்மேல் நிற்பேன்; நீ அந்தக் கன்மலையை அடி; அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும் என்றார். அப்படியே மோசே இஸ்ரவேல் மூப்பரின் கண்களுக்கு முன்பாகச் செய்தான். மோசே கன்மலையை அடித்தான். உடனே தண்ணீர் வந்தது. இங்கும் இஸ்ரவேல் ஜனங்கள் பார்க்கத்தக்கதாக மோசேயைக் கொண்டு கர்த்தர் புதிய செயல்களைசெய்தார். இஸ்ரவேல் ஜனங்கள், ஆடு மாடுகள் எல்லாம் திருப்தியாய் தண்ணீர் குடித்தன! **பழைய ஏற்பாட்டு காலத்தில் கர்த்தர் மோசேயைக் கொண்டு செய்தது அனைத்துமே அசாதாரணமான புதிய செயல்களே!**

## 2. புதிய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த பவுல்

புதிய ஏற்பாட்டு காலத்தில் அதிகமாக பேசப்பட்ட நபர்களில் ஒருவர் பவுல் அப்போஸ்தலர் என்பதை நாம் அறிவோம். ஆண்டவராகிய இயேசு பவுலை அழைத்து, அவன் நான் தெரிந்துகொண்ட பாத்திரம் என சொல்கிறார். ஆம். பவுல் முந்தினவைகளை யோசிக்கவில்லை. **கிறிஸ்துவுடனேகூடச் சிலுவை யிலறையப்பட்டேன், ஆயினும், பிழைத்திருக்கி றேன், இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். கலா.2:20.** என்கின்ற வார்த்தையை மிக தைரியமாகவும் ஆணித் தரமாகவும் கூறினான்.

பவுல் கிறிஸ்துவுக்காக, சுவிசேஷத்திற்காக பல மிஷனெரி பயணங்களை மேற்கொண்டான். சிறைச்சாலையிலிருந்து கொண்டே பல நிருபங்களை எழுதினான். பலத்த அற்புதங்களை செய்தான். **பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். (அப்போஸ்.19:11)** ஆதி திருச்சபையில் முதலாவதாக பேதுருவும், அடுத்தது பவுலும் தான் அதிகமாக பேசப்பட்ட நபர்கள் ஆவார்.

புதிய ஏற்பாட்டு காலத்தில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பவுலைப் பயன்படுத்தி மிகப்பெரிய அசாதாரணமான புதிய செயல்களை செய்தார் என்பதை நாம் புதிய ஏற்பாட்டு புத்தகங்களில் வாசிக்கிறோம்.

மோசேயையும் பவுலையும் கர்த்தர் பயன் படுத்தினதற்கு காரணம் அவர்கள் முந்தினவை களை நினைக்கவில்லை. எப்படியெனில் மோசே தன் பழைய வாழ்க்கையில் ஒரு கொலையாளி பவுல் தன் பழைய வாழ்க்கையில் கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தியவன்! ஆனால் இருவருமே ஒரு கால கட்டத்தில் பழையவைகளை மறந்து புதிய வாழ்க்கைக்குள் பிரவேசித்து கர்த்தருக்குள் வாழ்ந்தார்கள். எனவேதான் தேவன் அவர்கள் மூலமாக அசாதாரணமான புதிய செயல்களை செய்தார்.

இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே, நீங்கள் வனாந்தரமான சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களா? இனி அவ்வளவுதான் எல்லாம் முடிந்துவிட்டது என கலங்குகிறீர்களா? உங்கள் வாழ்விலும் கர்த்தர் புதிய வழியை காட்டுவார். **வனாந்தரம் எல்லாம் செழிப்பாகும். புதிய காரியம், புதிய செயல், புதிய வாழ்வு உங்களுக்கு உண்டாகும்.** உங்களைக் கொண்டு ஆண்டவர் புதிய காரியங்களை செய்வார். உங்களைக்கொண்டும் புதிய செயல்களை செய்வது இயேசுவுக்கு இலேசான காரியம்.

வனாந்தரத்தில் வழியையும், அவாந்தர வெளியில் ஆறுகளையும் உண்டாக்கினவர் உங்களோடு இருக்கிறார். **பழையவைகளை இனி நினைக்காதிருங்கள், கிறிஸ்துவுக்குள்ளாக வாழ இன்றே தீர்மானம் எடுங்கள்.** தேவன் உங்களிடம் எதிர்பார்க்கும் இந்த இரண்டு காரியங்களை நீங்களும் மோசேயைப் போல பவுலைப்போல கடைப்பிடியுங்கள். அப்பொழுது **உங்கள் வாழ்வில் புதிய காரியங்களை செய்வது மட்டுமன்றி உங்கள் மூலமாகவும் தேவன் புதிய செயல்களை செய்வார்.**

**"அசாத்தியங்கள் எல்லாமே சாத்தியமாகும் பழையவைகள் எல்லாமே புதியவைகளாகும்"**

# Praise Report
# துதி அறிக்கை






## கால் ஆணி குணமாகியது!

என் பெயர் ஜெயசுதா. என் பாதத்தில் 3 கால் ஆணி இருந்தது. அதனால் காந்தல் ஏற்பட்டு அதிக தூரத்திற்கு நடக்க முடியாமல் கஷ்டப்பட்டேன். அத்துடன் பாதத்தில் ஓட்டையும் விழுந்தது. **Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் திருநெல்வேலி கூட்டத்திற்கு வந்திருந்தப்பொழுது என் கால் பாதத்தை அவர்களிடம் காண்பித்து ஜெபிக்கும் படி சொன்னேன். சகோதரர் அவர்கள் பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். அதன்பின் நல்ல மாற்றம் ஏற்பட்டது. இப்பொழுது பரிபூரண சுகம் பெற்று நன்றாக நடக்கிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**

- Sis. ஜெய சுதா, திருநெல்வேலி

## வரவேண்டிய சம்பளம் கிடைத்தது!

என் மகள் பெயர் விஜிலா. மகள் வேலை பார்த்த கல்லூரியில் பல வருடங்களாக சம்பளம் தரவில்லை. அதற்காக ஜெபிக்கும்படி அன்பரின் ஊழியத்திற்கு கடிதம் எழுதி அனுப்பியிருந்தேன். **Dr.ஆனந்தஸ்திரா அவர்களிடமிருந்து பதில் கடிதம் வந்தது. அதன்பின் ஒரு சில நாட்களில் மகளுக்கு சம்பளம் கிடைக்க கர்த்தர் உதவி செய்தார். அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரித்து, என்னுடைய காணிக்கையை அன்பரின் ஊழியத்திற்கு தருகிறேன்.**

- Sis. சரோஜா, திருநெல்வேலி.

## 13 வருடங்களுக்கு பிறகு குழந்தை பாக்கியம்!

என் பெயர் ஹெயா பெஞ்சமின். என் மகனுக்கு திருமணம் முடிந்து 13 வருடங்களாக குழந்தை



இல்லை. அதனால் நாகர் கோவிலில் நடைபெறுகிற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு வந்து மகனுக்காக ஜெபித்து செல்வேன். அத்துடன் **Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் என் மகனுக்காக ஜெபிக்கும் படி சொன்னேன்.**

**சகோதரரும் பாரத்துடன் ஜெபித்து விட்டு பதில் கடிதத்தில் பல வசனங்களை எழுதி அனுப்புவார்கள். என் மகன், மருமகளுக்கு கர்த்தர் தாமே மனமிரங்கினார். கடந்த மார்ச் மாதம் என் மகனுக்கு ஆண் குழந்தை பிறக்கும்படி கர்த்தர் அதிசயம் செய்தார். கர்த்தரை நன்றியோடு ஸ்தோத்தரிக்கிறேன். எங்களுக்காக ஜெபிக்கிற சகோதரர் அவர்களுக்கும் எங்கள் நன்றியை**

தெரிவிக்கிறோம். ஊழியத்திற்கு எங்கள் நன்றி காணிக்கையை தருகிறோம்.

- திருமதி. ஹெயா பென்சமின்,
மார்த்தாண்டம்.

## கேன்சர் நோய் குணமாகியது!



எங்கள் பகுதியில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்து கொண்டபோது **Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் என்னுடைய அந்த ரிப்போட்டை காண்பித்தேன். உடனே சகோதரர் எனக்காக அழுது ஜெபித்து நீ சுகமாவாய் என சொல்லி அனுப்பினார்கள். அதன்பின் நான் சிகிச்சைக்கு சென்றபொழுது எனக்கு எடுக்கப் பட்ட அனைத்து பரிசோதனையிலும் நார்மல் என்று பரிசோதனை முடிவு வரும்படி கர்த்தர் உதவி செய்தார். கர்த்தரை மனதார துதிக்கிறேன்.** சகோதரர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

- Sis. கிரேஸ்

## திருமண தடை நீங்கியது!



என் சகோதரியின் பெயர் மார்த்தாள். அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். பிள்ளைகளுக்கு திருமணம் ஆகாமல் நீண்ட நாளாக தடையாகவே இருந்தது. அப்பொழுது ராஜமன்றியில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து, **Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் பிள்ளைகளின் திருமண காரியத்திற்காக ஜெபிக்கும்படி சொன்னோம். சகோதரர் ஜெபித்து விட்டு திருமணம் நடைபெறும் என சொல்லி அனுப்பினார்கள். ஒரு சில மாதங்களில் பிள்ளைகளுக்கு திருமணம் முடிய கர்த்தர் தயை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**

- திரு. சொர்ணகுமார்

## சொரியாசிஸ் நோய் நீங்கியது!



என் பெயர் சுபமணி. என் காலில் 17 ஆண்டுகளாக சொரியாசிஸ் நோய் இருக்கிறது. இதனால் அதிக பாடுகளை அனுபவித்து வருகிறேன். இந்த நோய் குணமாக ஏராளமான பணத்தை செலவு செய்துவிட்டேன். ஒரு முன்னேற்றமும் இல்லை. **ராஜமன்றியில் நடைபெற்ற கூட்டத்திற்கு நான் வந்திருந்து Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் எனக்காக ஜெபியுங்கள் என சொன்னேன். சகோதரர் ஜெபித்து அனுப்பினார்கள். இப்பொழுது என் நோயின் தாக்கம் குறைந்து கொண்டு வருகிறதை நான் நன்கு உணர்கிறேன். இதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.**

- Sis. சுபமணி, காக்கிநாடா

## பணிமாறுதல் கிடைத்தது!



நான் இரயில்வே துறையில் பணி செய்கிறேன். எனக்கு பணிமாற்றம் கிடைப்பதில் தடையாகவே இருந்தது. கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்து கலந்து கொண்டேன். **Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள்**

ஜெபித்து "தீர்க்கதரிசனமாக சொன்னபடியே எனக்கு ஒரே வாரத்தில் பணி மாறுதல் கிடைத்தது" கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

- சகோ. வெங்கட்ராவ்., காக்கிநாடா

## அற்புத விடுதலை

**பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். (1 யோவான் 3:8)**



நான் இயேசு கிறிஸ்துவை அறியாதவள். திருமண மான நாளிலிருந்து எனது உறவினர்கள் என் மீது பொறாமை கொண்டு பயங்கரமான ஏவல் காரியங்களை செய்த னர். இதன் நிமித்தம் நான் மிகுந்த கஷ்டத் திற்குள்ளானேன். பல சமயங்களில் இரவு 10 மணிக்கெல்லாம் என் வீட்டிற்குள் ஒரு ஆவி நடமாடுவதை நான் பார்ப்பேன். அந்த ஆவி வீட்டிற்குள் இருந்த பொருட்களை எல்லாம் கீழே தள்ளி என் நெஞ்சில் ஏறி என்னை அமுக்கும். ஒருமுறை வயதான கிழவி போலவும், இன்னொரு சமயம் வாலிபனை போலவும் வீட்டிற்குள் வந்தது. அது நகருகிற சத்தம், அதின் உருவம் எல்லாம் எனக்கு தெரியும். நான் மிகவும் பாடுபட்டேன். காலையில் என்னால் எழும்பவே முடியாது, உடல் பயங்கரமாக வலிக்கும்.

என் தோழிகள் வாயிலாக ஆராதனை டி.வி.யில் ஒளிபரப்பாகும் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சியை பற்றி அறிந்துதொடர்ந்து பார்க்க ஆரம்பித்தேன். அந்த நிகழ்ச்சியின் வாயிலாக இயேசுகிறிஸ்துவின் வல்லமையை, மகிமை யை அறிந்துக் கொண்டேன். தேவ செய்திகள் மற்றும் ஜெபம் எனக்கு மிகுந்த ஆறுதலைத் தந்தது.

ஒரு நாள் இரவு அந்த ஆவியின் போராட்டம் என்னை பயங்கரமாக தாக்கியது. அந்த நேரத்தில் கடுமையான நெஞ்சு வலி ஏற்பட்டு இறக்கும் தருவாயில் இருந்தப் பொழுது, இயேசுகிறிஸ்து என் முன் தோன்றி னார். இயேசுவோடு சேர்ந்து Dr.ஆனந்த ஸ்திரா அவர்களும் காட்சியளித்தார். கனப்பொழுதில் என்னை தொந்தரவு செய்த அந்த அசுத்த ஆவியின் போராட்டம் நீங்கியது. நான் முழு விடுதலை பெற்றேன். உயிர் போகும் நிலையில் இருந்த எனக்கு கர்த்தர் மீண்டும் ஜீவனைக் கொடுத்தார்.

அதன்பின் முதல் முறையாக ராஜ மன்றியில் நடைபெற்ற கூட்டத்திற்கு கடுமையான இடுப்பு வலியோடு வந்திருந் தேன். ஜெப வேளையில் Dr. ஜேன் ஜாஷ்வா அவர்கள் இங்கு இடுப்பு வலியோடு வந்திருக் கிற சகோதரியை இயேசு குணமாக்கிற எனவும், "நான் வீட்டில் அனுபவித்த அந்த சத்துருவின் போராட்டங் களைக் குறித்தும், அத்துடன் இயேசுகிறிஸ்து தான் இந்த நாள் வரை உன் ஜீவனை பாது காத்து வருகிறார்" எனவும் சொன்னார்கள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

என்னை இவ்வளவாய் நேசித்து, பிசாசின் கிரியைகளை அழித்து என்னை ஜீவனோடு பாதுகாத்து வருகிற கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் குடும்பத்தினருக்கு என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.

- திருமதி. வரலட்சுமி, விஜயவாடா

Telugu Whats App No: 91770 87860

Tamil Whats App No: 95004 87059

## பொருத்தனை ஜெபத்தை கர்த்தர் கேட்டார்!

என் பெயர் கிரேஸ்லெட். என் மகனுக்கு பல ஆண்டுகளாக திருமணம் நடைபெறவில்லை. அதிக தடையாகவே இருந்தது. **அதனால் நாங்கள் ஆண்டவரிடம் பொருத்தனை செய்தோம். எங்கள் மகனுக்கு திருமணம் நடந்தால் அன்பரின் ஊழிய பத்திரிக்கையில் சாட்சி எழுதுவோம் என பொருத்தனையோடு குடும்பமாக ஜெபித்தோம்.**



**கடந்த மே மாதம் 4-ம் தேதி என் மகனுக்கு ஆசீர்வாதமாய் திருமணம் நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். ஆண்டவருக்கு கோடான கோடி நன்றியை செலுத்துகிறோம்.** ஊழியத்திற்கு எங்கள் நன்றி காணிக்கையை தருகிறோம்.

**- திருமதி. கிரேஸ்லெட், நாகர்கோவில்.**



# ஜெப ஸ்தல கட்டிட சீரமைப்பு பணி

எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி,
அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்.
(நெகே.2:18)

அன்பு பங்காளர்களே,

நீங்கள் அறிந்திருக்கிறபடி நம்முடைய அன்பரின் ஊழிய ஜெப ஸ்தல கட்டிடம் பழுது பார்த்து புதுப்பிக்கும் பணி மற்றும் பெயிண்டிங் பணிகள் அனைத்தும் கடந்த 3 மாதங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கர்த்தருடைய பெரிதான கிருபையினால் கட்டிடத்தின் தென்புறம் சுமார் 160 அடி நீளத்திற்கு பழுது பார்த்து சீரமைக்கும் பணி, பெயிண்டிங் பணிகள் அனைத்தும் நிறைவு பெற்று தற்பொழுது சாரங்கள் அவிழ்க்கப்பட்டு வருகிறது.

தொடர்ந்து கட்டிடத்தின் வடபுறத்தில் சீரமைக்கும் பணிகளுக்காக சாரங்கள் அமைக்கும் பணி துவங்கப்பட்டிருக்கிறது. இச்சீரமைப்பு பணிக்காக இதுவரை ஜெபித்த மற்றும் காணிக்கை கொடுத்த பங்காளர்களுக்கு எங்களுடைய நன்றியை தெரிவிக்கிறோம்.

## கட்டிடத்தின் தென்புறத்தில் முடிவு பெற்ற வேலைகள்!



இந்தப்பணியை முழுமையாக நிறைவு செய்வதற்கு இன்னும் 23 இலட்சங்கள் தேவைப்படுகிறது. இந்தப்பணிக்கு உதவி செய்கிறவர்கள் கீழ்க்கண்ட வங்கி கணக்கிற்கு உங்கள் தாராளமான காணிக்கையை கொடுத்து தாங்குங்கள். கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக உங்களுக்குத் திருப்பித்தருவார். (லூக்கா 6:38)

## கட்டிடத்தின் வடபுறத்தில் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள்!





## இன்னும் தேவை – 23 இலட்சங்கள்

Rs.10,000 கொடுத்து தாங்கக்கூடியவர்கள் 230 பேர் தேவை!

அல்லது

Rs.20,000 கொடுத்து தாங்கக்கூடியவர்கள் 115 பேர் தேவை!

நீங்கள் அனுப்பும்பொழுது அன்பரின் ஊழிய ஜெப ஸ்தல கட்டிடம் சீரமைக்கும் பணிக்கு என குறிப்பிட்டு அனுப்புங்கள்.

**MINISTRY OF JESUS**
**A/c No. 10848474869**
**State Bank of India**
**Cantonment**
**Trichy Main Branch**
**IFS code: SBIN 0000930**

**Google Pay, Paytm, PhonePe, etc..** மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்கிற்கு காணிக்கை அனுப்பலாம். பண பரிமாற்ற செயலிகள் வாயிலாக காணிக்கை அனுப்ப விரும்புகிறவர்கள் மேலும் விபரங்கள் அறிய இந்த பத்திரிக்கையின் 18–ம் பக்கத்தில் பார்த்து அதற்குரிய விபரங்களை அறிந்துக் கொள்ளலாம்.

காணிக்கை அனுப்பிய விபரத்தை SMS மூலம் தெரிவிக்க வேண்டிய எண்: 95004 87061

சீரமைக்கும் பணிக்காக தினந்தோறும் ஜெபியுங்கள்:

- உயர்மான இடத்தில் ஏறி வேலை செய்யும் வேலையாட்களின் பாதுகாப்பிற்காக ஜெபியுங்கள்.
- வேலைகள் அனைத்தும் தடையின்றி நேர்த்தியாக செய்து முடிக்கப்பட ஜெபியுங்கள்
- பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்

# செப்டம்பர் மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

# சந்ததிகளுக்கான ஆசீர்வாதம்

| | |
|---|---|
| செப்டம்பர் 1 | உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன். (ஆதி. 13:16) |
| செப்டம்பர் 2 | … தேவன் நீதிமானுடைய சந்ததியோடே இருக்கிறாரே. (சங். 14:5) |
| செப்டம்பர் 3 | கர்த்தர் உன் கர்ப்பத்தின் கனியிலும், … உனக்குப் பரிபூரண நன்மை உண்டாகக் கட்டளையிடுவார். (உபா. 28:11) |
| செப்டம்பர் 4 | உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன். (ஏசாயா 44:3) |
| செப்டம்பர் 5 | ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும்; தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும். (சங். 22:30) |
| செப்டம்பர் 6 | பயப்படாதே, நான் உன்னோடேகூட இருந்து, என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினிமித்தம் உன்னை ஆசீர்வதித்து, உன் சந்ததியைப் பெருகப் பண்ணுவேன். (ஆதி. 26:24) |
| செப்டம்பர் 7 | கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் சந்ததி பூமியில் பலத்திருக்கும். (சங். 112:1-2) |
| செப்டம்பர் 8 | நான் என் தாசனாகிய தாவீதின் சந்ததியையும் எனக்கு ஊழியஞ்செய்கிற லேவியரையும் வர்த்திக்கப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரே. 33:22) |
| செப்டம்பர் 9 | கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது. (சங்கீதம் 103:17) |
| செப்டம்பர் 10 | தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக் கொம்பை ஏற்படுத்தினார். (லூக்கா 1:75) |
| செப்டம்பர் 11 | உன் சந்ததியை அவர்கள் சிறையிருப்பின் தேசத்திலுமிருந்து விடுவித்து இரட்சிப்பேன். (எரே. 46:27) |
| செப்டம்பர் 12 | உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும். (ஏசா. 54:13) |
| செப்டம்பர் 13 | உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக்கன்றுகளைப்போல் இருப்பார்கள். (சங். 128:3) |
| செப்டம்பர் 14 | நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள். (கலா. 3:29) |

| | |
|---|---|
| செப்டம்பர் 15 | அவர்களைப் பார்க்கிற யாவரும் அவர்கள் கர்த்தரால் ஆசீர்வாதம் பெற்ற சந்ததியென்று அறிந்துகொள்வார்கள். (ஏசா. 61:9) |
| செப்டம்பர் 16 | ... தாம் அபிஷேகம் பண்ணின தாவீதுக்கும் அவன் சந்ததிக்கும் சதாகாலமும் கிருபை செய்கிறார். (சங். 18:50) |
| செப்டம்பர் 17 | உன் சந்ததி பூமியின் தூளைப் போலிருக்கும் நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். (ஆதி. 28:14) |
| செப்டம்பர் 18 | நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான். (யோசு. 24:15) |
| செப்டம்பர் 19 | இஸ்ரவேலின் சந்ததியாகிய யாவரும் கர்த்தருக்குள் நீதிமான்களாக்கப்பட்டு மேன்மை பாராட்டுவார்கள். (ஏசா. 45:25) |
| செப்டம்பர் 20 | நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான் அவனுக்குப் பிறகு அவன் பிள்ளைகளும் பாக்கியவான்களாயிருப்பார்கள். (நீதி. 20:7) |
| செப்டம்பர் 21 | உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும். (ஆதி. 26:5) |
| செப்டம்பர் 22 | அவர்கள் சந்ததியானது ஜாதிகளின் நடுவிலும், அவர்கள் சந்தானமானது ஜனங்களின் நடுவிலும் அறியப்பட்டிருக்கும். (ஏசா. 61:9) |
| செப்டம்பர் 23 | நான் படைக்கப்போகிற புதிய வானமும் புதிய பூமியும் எனக்கு முன்பாக நிற்பது போல, உங்கள் சந்ததியும், உங்கள் நாமமும் நிற்குமென்று கர்த்தர் சொல்லுகிறார். (ஏசா. 66:22) |
| செப்டம்பர் 24 | செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும். (சங். 112:2) |
| செப்டம்பர் 25 | யோபு நூற்றுநாற்பது வருஷம் உயிரோடிருந்து, நாலு தலைமுறையாகத் தன் பிள்ளைகளையும் தன் பிள்ளைகளுடைய பிள்ளைகளையும் கண்டான். (யோபு 42:16) |
| செப்டம்பர் 26 | எங்கள் குமாரர் இளமையில் ஓங்கி வளருகிற விருட்சக்கன்றுகளைப் போலவும், எங்கள் குமாரத்திகள் சித்திரந்தீர்ந்த அரமனை மூலைக் கற்களைப் போலவும் இருப்பார்கள். (சங். 144:12) |
| செப்டம்பர் 27 | நீங்களோ, ... தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். (1 பேதுரு 2:9) |
| செப்டம்பர் 28 | நீதிமான்களுடைய சந்ததியோ விடுவிக்கப்படும். (நீதி. 11:21) |
| செப்டம்பர் 29 | ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கைகொடுத்தார். (எபி. 2:16) |
| செப்டம்பர் 30 | உன் மேலிருக்கிற என் ஆவியும், நான் உன் வாயில் அருளிய என் வார்த்தைகளும், இதுமுதல் என்றென்றைக்கும் உன் வாயிலிருந்தும், உன் சந்ததியின் வாயிலிருந்தும், உன் சந்ததியினுடைய சந்ததியின் வாயிலிருந்தும் நீங்குவதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார். (ஏசா. 59:21) |

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

2 கொரிந்தியர் 9:7

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்

**மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)**
**Online Donation (Website)**
**Bank Account / QR Code**
**UPI / Google pay / Paytm / Phonepe**

UPI Google Pay Paytm PhonePe

**இந்த QR code-ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்.**

### வங்கிக் கணக்குகளின் விபரம்



| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
| --- | --- | --- |
| A/c no. 10848469699 | A/c no. 10848559426 | A/c no. 10848474869 |

**IFS Code: SBIN 0000930**
**State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

**காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக்கொள்ளுங்கள். (10.00 AM - 6.00 PM)**

## Cell no. 94888 45627, 80987 42638

**உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தை தாங்குங்கள்.**

கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!

**அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்**
**10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.**

# WE ARE HIRING

Trichy



- **Accountant**
  **(B.com. / M.com. Graduates)**
  *Skills Required : Tally ERP 9*
- **Data Entry Operators**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in computing skills*
- **Correspondence**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Typing & computing skills (Tamil, English, Telugu)*
- **Social Media Executive**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in social media platforms , Good in English & Tamil*
- **Video Editors**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Premiere Pro & After Effects*
- **Graphic Designers**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Photoshop & Illustrator*
- **Cameraman**
  **with adequate experience**
- **Drivers**
- **Cooks**
- **House Keepers**

- **Male / Female**
- **Christians Preferred**
- **Accommodation will be provided**
- **Apt Remuneration will be paid**

Apply to :

**info@mojindia.org**



# SJ SAVES TRUST
## மூலமாக மேற்கொள்ளப்பட்ட அறப்பணிகள்

**திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், ... பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.**
**- (யாக்கோபு 1:27)**

### S.J.S.T. டியூஷன் சென்டர்

கடந்த ஜூலை மாதம் சேலம் மாவட்டம் சேஷன்சாவடி, A.N.மங்களம், மேட்டுப்பட்டி, காரிபட்டி, மின்னாம்பள்ளி, ஏரிக்காடு, கருமாபுரம், பொன்மலைநகர், ஆகிய பகுதியில் உள்ள **S.J.S.T.** டியூஷன் சென்டரில் படித்துக்கொண்டிருக்கிற 400 ஏழை எளிய மாணவர்களை **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் நேரில் சந்தித்தார். பிள்ளைகளின் குடும்ப சூழ்நிலையை கேட்டறிந்தார். பல நீதி நெறி கதைகள் வாயிலாக அவர்கள் வாழ்வில் முன்னேறுவதற்கான அறிவுரைகளை கூறினார்கள்.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மல்லிகாபுரம், சேலூர் செல்லப்பப்பாளையம், சாணார் பாளையம், சாமிநாதபுரம் ஆகிய ஊர்களில் உள்ள 100 பிள்ளைகளை சந்தித்து, அவர்கள் நன்கு படிப்பதற்கான ஆலோசனைகளை கூறினார்கள். அதன்பின் பள்ளிக்கு தேவையான உபகரணங்களை வழங்கினார்கள்.

### பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட பொருட்கள்

பிள்ளைகளின் படிப்பிற்கு தேவையான நோட்டு புத்தகம், மற்றும் கல்வி உபகரணங்களை (School bag, water bottle, Tiffin box, Rulled Note, Pen, Pencil, Pouch, Eraser, Sharpner, Scale) **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் வழங்கினார்கள். அன்றாட தேவைக்குரிய சோப்பு, பேஸ்ட், பிரஸ், தேங்காய் எண்ணெய் போன்ற பொருட்களையும் கொடுத்தார்கள்.

பிள்ளைகளின் நல்ல ஆரோக்கியத்திற்காக புரோட்டின் பவுடர், வைட்டமின் டானிக், காஃப் சிரப் ஆகியன கொடுத்தார்கள்.

இறுதியில் பிள்ளைகளுக்கு சுவையான சிக்கன் பிரியாணி, முட்டை, வாழைப்பழம் மற்றும் இனிப்பு, கார வகைகள் அனைத்தும் கொடுக்கப்பட்டது. பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் சாப்பிட்டு சென்றார்கள்.

## பங்காளர்களின் பங்கு

இந்த பணிக்கு உதவி செய்கிற ஒவ்வொரு பங்காளர்களையும் கர்த்தர் ஆசீர்வதிப்பார், அவர்கள் சந்ததிகளை ஆசீர்வதிப்பார். ஏழைக்கு இரங்கி நீங்கள் செய்கிற இந்த உதவிகளுக்காக எங்களுடைய நன்றியைத் தெரிவிக்கிறோம்.

**டியூஷன் சென்டருக்கு வருகிற பிள்ளைகள் அனைவருக்கும் தினந்தோறும் இரவு உணவு கொடுத்து வருகிறோம். இதுவரை டியூஷன் சென்டர் மூலமாக 500 பிள்ளைகள் பயன் பெறுகிறார்கள். மாதந்தோறும் ஒரு பிள்ளைக்கு ஆகும் செலவு Rs.1000/- ஆகும்.**

## ஏழை பெண்களுக்கான தையல் பயிற்சி வகுப்புகள்

கிராமப்புறங்களில் உள்ள ஏழை விதவைப் பெண்களுக்கும், HIV-நோயினால் பாதிக்கப்பட்டு வேலைக்கு போக முடியாத பெண்களுக்கும், வறுமை கோட்டின் கீழுள்ள பெண்களுக்கும் சிறந்த முறையில் தையல் பயிற்சி மற்றும் கணினி பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act–ன்படி Sec. 80G Exemption உண்டு**

## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**
Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**
Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**
Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**
ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

## S.J.S.T. டியூஷன் சென்டரில் படித்துக்கொண்டிருக்கிற 520 ஏழை எளிய மாணவர்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் மற்றும் பள்ளிக்கு தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டது













## உதவி பெற்ற பிள்ளைகளில் ஒரு பகுதியினர்



## S.J. Saves Trust மூலமாக தையல் பயிற்சி பெறும் ஏழைப் பெண்கள்





# S.J.S.T கிராமப்புற மருத்துவமனை பணிகள்

**அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார். - மத்தேயு 8:17**

திருச்சியில் இயங்கி வருகிற நமது மருத்துவமனையானது அதன் சுற்றுப் புறங்களில் உள்ள ஏராளமான கிராம மக்களுக்கு அதிக பிரயோஜனமாக இருக்கிறது. மக்கள் வந்து சிகிச்சை பெற்று நலமுடன் செல்கின்றனர். அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்.


மருத்துவமனையில் தங்கி பணி செய்யக்கூடிய நல்ல கிறிஸ்தவ மருத்துவர்கள் தேவைப்படுகிறார்கள். அதற்காக ஜெபியுங்கள். விசேஷமாக மருத்துவமனைக்கு தியேட்டர் கட்டவேண்டும். அதற்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள். கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுகிறபடி இந்தப் பணிக்கு நீங்கள் உதவி செய்யலாம்.






# உலகச் செய்திகள்

## முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்களின் பொன்மொழிகளில் சில



- உன் கைரேகையை பார்த்து எதிர்காலத்தை நிர்ணயித்து விடாதே. ஏனென்றால் கையே இல்லாதவனுக்கு கூட எதிர்காலம் உண்டு.
- முதல் வெற்றிக்குப் பிறகு ஓய்வெடுத்து விடாதே!
- அடுத்த முறை தோல்வியுற்றால் உன் முதல் வெற்றி அதிஷ்டத்தால்தான் கிடைத்தது என்பார்கள்.
- கனவு காணுங்கள்... கனவுதான் சிந்தனையாகவும் சிந்தனைதான் செயலாகவும் மாறுகிறது.
- உன்னால் மாற்ற முடியாததை அப்படியே ஏற்றுக் கொள்ள பழகிக் கொள்.
- உலகம் உன்னை அறிவதைவிட, உன்னை உலகிற்கு அறிமுகம் செய்து கொள்.
- கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே அது உன்னை கொன்று விடும். கண்ணை திறந்து பார் அதை வென்று விடலாம்.
- நீங்கள் சூரியனைப் போல பிரகாசிக்க வேண்டுமானால், முதலில் சூரியனைப் போல எரிய வேண்டும்.
- ஒரு நாள் நிச்சயம் விடியும். அது உன்னால் மட்டும் முடியும்.
- நீ செல்லும் பாதைகளில் தடைகள் ஏதும் இல்லை என்றால் அது நீ செல்லும் பாதை அல்ல, யாரோ ஒருவர் சென்ற பாதை.
- நீங்கள் உறங்கும்போது வருவதல்ல கனவு, உங்களை உறங்கவிடாமல் செய்வதே கனவு.
- ஒரு முறை வந்தால் கனவு இருமுறை வந்தால் ஆசை! பலமுறை வந்தால் இலட்சியம்!
- மாணவர்களின் மிக முக்கியமான இலக்கணம், கேள்வி கேட்பதே.
- இந்த உலகத்தில் பிறந்த அனைவருக்கும் வரலாற்றின் பக்கங்களில் ஒருபக்கம் ஒதுக்கப் பட்டுள்ளது. ஆனால் அந்த பக்கத்தை இந்த உலகையே படிக்க வைப்பது உங்கள் கைகளில் தான் உள்ளது.
- உலகிற்கு ஏற்றாற் போல தன்னை மாற்றிக்கொள்கின்றனர் பலர்; ஆனால் தனக்கு ஏற்றாற்போல, உலகையே மாற்றிக் கொள்கின்றனர் சிலர்,
- அற்ப சந்தோஷங்களுக்காக ஓடுவதை விட உயர்ந்த இலட்சியங்களுக்காகப் பாடுபடுவது சாலச்சிறந்தது!
- என்னால் முடியும், நம்மால் முடியும், இந்தியாவால் முடியும் இந்த வாசகத்தை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.
- புதிய விஷயங்களை படைக்கவேண்டும் என இலட்சியம் உள்ளவர்களுக்கு அவர்களது வேட்கையே ஊக்கமாக அமையும். மற்றவர்களை தோற்கடிக்க வேண்டும் என்ற எண்ணம் தேவையில்லை.

திருச்சியில்

# உங்கள் விடுதலையின் நாள்

**செப்டம்பர் 9** இரண்டாவது சனிக்கிழமை

நேரம்: காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

இடம் : Y.M.C.A. A/c ஹால்

(அரசு மருத்துவமனை எதிரில்) புத்தூர், திருச்சி.

தேவ செய்தியாளர்: **Rev.Dr.A. ஜாஷ்வா ஜோனத்தன் மோசஸ்ராஜ் ஸ்திரா**



இக்கூட்டத்தில் பங்குபெறுகிற ஒவ்வொருவரின் ஆசீர்வாதத்திற்காகவும், விடுதலைக்காகவும் விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்! கூட்ட முடிவில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே ஜெபம் செய்து ஆலோசனை வழங்கப்படும்!

தொடர்புக்கு : செல் 94888 45627 & 80987 42638

வாரங்கல்

# அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

**செப்டம்பர் 18** திங்கள் கிழமை (அரசு விடுமுறை)

இடம் : அப்நஸ் ஃபங்ஷன் ஹால், எல்.பி.நகர், போட்சம் மைதானம், வாரங்கல்.

நேரம்: காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை



தேவ செய்தியாளர்கள்

**Dr. ஆனந்த ஸ்திரா**

**Dr. ஜேன் ஜாஷ்வா**



*(கூட்ட முடிவில் தனிஜெபம் ஏறெடுக்கப்படும்)*

தொடர்புக்கு : செல் 94888 45627 & 80987 42638

திருவனந்தபுரம்

# அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

**செப்டம்பர் 27** புதன் கிழமை (அரசு விடுமுறை)

இடம் : பஞ்சாயத்து அசோசியேஷன் ஹால், வெள்ளையம்பலம், திருவனந்தபுரம் - 33

நேரம்: காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை

தேவ செய்தி

**Dr. ஆனந்த ஸ்திரா**

*(கூட்ட முடிவில் தனிஜெபம் ஏறெடுக்கப்படும்)*


காணத்தவறாதீர்!
நேரலை நிகழ்ச்சி! (தமிழில்)
செப்டம்பர் 28
நேரம் : மாலை 7.00 மணி
சிறப்பு ஆராதனை & தேவ செய்தி
Dr. ஜேன் ஜாஷ்வா
ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா
Dr Jane Joshua


திருச்சியில்
அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்
செப்டம்பர் 30
சனிக்கிழமை
இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
10வது குறுக்குத்தெரு, மேற்குவிஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி - 18.
நேரம்: காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை
தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா
மற்றும் குடும்பத்தினர்
தொடர்புக்கு : செல் 94888 45627 & 80987 42638


திருநெல்வேலியில்
உங்கள் விடுதலையின் நாள்
அக்டோபர் 24
செவ்வாய் கிழமை
(அரசு விடுமுறை)
இடம் : செல்வி மஹால்,
காளிமார்க் பேருந்து நிறுத்தம் அருகில்,
முருகன் குறிச்சி, பாளையங்கோட்டை,
திருநெல்வேலி
நேரம்: காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை
விசேஷித்த ஆலோசனையும் ஜெபமும்
Rev.Dr.A. ஜாஷ்வா
கூட்டத்தில் பங்குபெறுகிற ஒவ்வொருவருக்கும்
தனித்தனியே ஜெபம் செய்து ஆலோசனை வழங்கப்படும்!
தொடர்புக்கு : செல் 94888 45627 & 80987 42638



# விஜயவாடா, தாம்பரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் ஜெபத்தினால் மகத்துவ தேவன் செய்த அற்புதங்கள்!

## பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரம்பினேன்!



என்னுடைய பெயர் சத்தியபால். ஜூலை மாதம் விஜயவாடாவில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்தில் கலந்து கொண்டேன். அந்த நாளில் Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் தேவ செய்தி வழங்கி ஜெபித்தார்கள். பாஸ்டர் கொடுத்த செய்தி என்னை மிகவும் தொட்டது. ஜெப வேளையில் நான் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் அபரிமிதமாக நிரப்பப்பட்டேன். அபிஷேகம் பெற்ற பிறகு எனக்குள் ஒரு மாற்றம் ஏற்பட்டதை நான் நன்கு உணருகிறேன். தேவனுக்கே மகிமை!

- திரு. சத்தியபால், விஜயவாடா.

## அற்புத சுகம் பெற்றேன்!



என் பெயர் குளோரி ஸ்டெல்லா. தாம்பரத்தில் நடைபெறுகிற இந்த கூட்டத்தைக் குறித்து என் தோழியின் மூலம் அறிந்து, முதல் முறையாக வந்தேன். நான் மிகுந்த தலைவலியோடும் கண் வலியோடும் இக்கூட்டத்தில் அமர்ந்திருந்தேன். ஜெப வேளையில் Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் வலி வேதனை உள்ள இடத்தில் கைகளை வைத்து ஜெபிக்கச் சொன்னார்கள். நானும் என் தலையிலும், கண்களிலும் கையை வைத்து ஜெபித்தேன். அந்த நேரத்தில் எனக்கிருந்த தலைவலி, கண் வலியை கர்த்தர் முற்றிலுமாக நீக்கினார். என்னைத் தொட்டு சொஸ்தமாக்கிய கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.

- திருமதி. குளோரி ஸ்டெல்லா, தாம்பரம்.

## பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிரம்பினேன்!



எனது பெயர் ஸ்வப்னபாபு. ஜூலை மாதம் விஜயவாடாவில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்தில் கலந்துகொண்டேன். Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள் கொடுத்த தேவ செய்தி எனக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தது. ஜெப வேளையில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை என் மேல் இறங்கினது. அந்த நேரத்தில் என்னால் நிற்க முடியவில்லை. அந்த அளவிற்கு தேவ வல்லமை எனக்குள் இறங்கிக் கொண்டிருந்தது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் என்னை நிரப்பிய அன்பின் தேவனை துதிக்கின்றேன்.

- திரு. ஸ்வப்னபாபு, விஜயவாடா

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month



# அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

**கோயம்புத்தூரில்**

செப்டம்பர் 6
புதன் கிழமை
(அரசு விடுமுறை)

இடம் :
TELC சபா மண்டபம்
மணிக்கூண்டு அருகில்,
டவுண் ஹால், கோயம்புத்தூர்



**சென்னையில்**

அக்டோபர் 2
திங்கள் கிழமை
(அரசு விடுமுறை)

இடம் :
BKN மினி ஹால்,
ரித்தர்டன் ரோடு, வெப்பேரி,
சென்னை.

தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா
Mrs. மார்கிரேட் ஸ்திரா

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.30 மணி வரை

கூட்ட முடிவில் தனிஜெபம் ஏறெடுக்கப்படும்

## மதுரையில் அற்புதத்தின் மாலை கூட்டம்

இடம் : மாஸ் ஹால், ஹோட்டல் ஜான்ஸ் (PTR)
ஆம்னி பேருந்து நிலையம் எதிரில்,
மாட்டுத்தாவணி, மதுரை.

செப்டம்பர் 9 சனிக்கிழமை

நேரம் : மாலை 4.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா

(கூட்ட முடிவில் தனிஜெபம் ஏறெடுக்கப்படும்)

## நாகர்கோவிலில் உங்கள் விடுதலையின் நாள்



அக்டோபர் 2
திங்கள் கிழமை
(அரசு விடுமுறை)

இடம் : அபிஷேக் காம்ப்ளக்ஸ்,
மெத்தை கடை மாடி,
WCC ரோடு, நாகர்கோவில்.

நேரம்: காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

தேவ செய்தி
Rev.Dr.A. ஜாஷ்வா

(கூட்ட முடிவில் தனிஜெபம் ஏறெடுக்கப்படும்)

தொடர்புக்கு : செல் 94888 45627 & 80987 42638

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,